


உலகில் தோன்றிய ஒவ்வொரு புரட்சிகர இயக்கத்துக்கும் ஒவ்வொரு காலகட்டத்தில் ஏதாவது ஓர் அரசு உதவியிருக்கிறது. நல்லெண்ண அடிப்படையில் அல்லது நயவஞ்சக அடிப்படையில். காரணங்கள் இரண்டாக இருக்கலாம். ஆனால் உதவி கட்டாயம். சொந்த நாட்டு அரசு உதவாத பட்சத்தில், அக்கம்பக்கத்து தேசங்கள் உதவியிருக்கின்றன. பணமாக. ஆயுதங்களாக. அடைக்கலமாக. ஏதாவதொரு வகையில் இந்த உதவிகள் இருந்திருக்கின்றன.

அதே மாதிரி, தம் கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரான வகையில் இருந்திருந்தாலும், இத்தகைய அரசாங்க உதவிகளை இயக்கங்களும் மறுக்காமல் பெற்றுக்கொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் ஒரு குறுகிய காலத்துக்காவது. பெற்ற உதவிகளுக்காக இயக்கங்கள் தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டதில்லை; ஒரு காலத்தில் உதவி செய்திருக்கிறோம் என்பதற்காக அரசுகள் அவர்களைத் தாக்காமலும் இருந்ததில்லை.

ஹமாஸுக்கு இஸ்ரேலிய அரசு செய்த உதவி, அல்லது செய்ய முன்வந்த உதவி என்பது முற்றிலும் அவர்களது மத ரீதியிலான நடவடிக்கைகளுக்கானது. ஹமாஸ் என்கிற பெயர் சூடிக்கொள்வதற்கு முன்னால், ஹமாஸ் இயக்கத்தினர்கள் இஸ்லாமிய காங்கிரஸ் என்னும் பொதுவான பெயரில், கொஞ்சகாலம் காஸா பகுதியில் இயங்கி வந்தார்கள். முன்பே பார்த்த இஸ்லாமிய சகோதரத்துவ சித்தாந்தம்தான் அடிப்படை. வழிபாடுகள், பிரார்த்தனைக் கூட்டங்கள், மத போதனை வகுப்புகள், இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வது தொடர்பான பிரசாரங்கள்.

காஸாவில் யாரும் சினிமா பார்க்கக் கூடாது. மதுவருந்தக் கூடாது. ஊரில் ஒரு ஒயின் ஷாப் இருக்காது அக்காலங்களில். எங்காவது திறந்திருக்கிறது என்று கேள்விப்பட்டால் போய் கொளுத்திவிடுவார்கள். உடுத்தும் ஆடைகள் முதல் நடத்தும் கூட்டங்கள்வரை அனைத்தையும் இஸ்லாமிய மயமாக்குகிற வேகம் அவர்களுக்கு இருந்தது. நடத்துவது சுதந்திரப் போராட்டம் என்று பி.எல்.ஓ. சொல்லிவந்தபோது, ‘ஆம், சுதந்திரப் போராட்டம்தான். ஆனால், அல்லாவின் பெயரால் நடத்தப்படுவது’ என்று ஒரு பின்னிணைப்பு சேர்த்தார்கள்.

இஸ்ரேல் அரசுக்கு ஹமாஸின் சித்தாந்தம் வெற்றி பெறக்கூடியது என்கிற நம்பிக்கை அக்காலத்தில் இல்லை. ஒரு சிறிய மத அமைப்பாக மட்டுமே அதனைப் பார்த்தார்கள். ஆனால், ஒரு தேவை என்று வருமானால் ஆயுதம் ஏந்தத் தயங்காதவர்கள். இவர்களை ஏன் பி.எல்.ஓவுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது?

ஆனால், இஸ்லாமிய காங்கிரஸாக அப்போது இருந்த ஹமாஸ், இதையே வேறு கோணத்தில் பார்த்தது. இஸ்லாத்துக்கு முற்றிலும் விரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசம் இஸ்ரேல். மேற்கத்திய உறவுகள். மேற்கத்திய வாழ்க்கை முறை. மேற்கத்திய சிந்தனைப் போக்கு. விரட்டத்தான் முடியுமே தவிர, அவர்களைத் திருத்த முடியாது. ஆனால் ஆட்சியில் இருக்கிறார்கள். அபகரித்துக்கொண்ட ஆட்சி. பணம் இருக்கிறது. அமெரிக்கா கொட்டிக்கொடுக்கிற

பணம். ஏனைய பல ஐரோப்பிய தேசங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இஸ்ரேலுக்குத் தொடர்ந்து உதவி செய்துகொண்டுதான் இருக்கின்றன. ஆற்றில் போகிற பணம். அள்ளிக் கொடுக்காவிட்டாலும் கிள்ளிக் கொடுக்க முன்வருகிறபோது, எதற்கு வேண்டாம் என்று சொல்லவேண்டும்?

தவிரவும் இஸ்ரேல் அரசு நேரடியாக இஸ்லாமிய காங்கிரஸின் கரங்களில் பணத்தையோ, காசோலையையோ கொண்டுவந்து தருவதாகச் சொல்லவில்லை. மாறாக, காஸா பகுதியில் அவர்கள் மேற்கொள்ளும் மதம் மற்றும் சமூகப் பணிகளுக்கு உதவுவதன்பொருட்டு, காஸாவின் கவர்னர் நிதிக்குத்தான் பணம் அனுப்பினார்கள். இதை ஜெனரல் இட்ஸாக் செகெவ் (Yitzhak Segev) என்கிற அந்த கவர்னரே பின்பொரு சமயத்தில் உறுதிப்படுத்தியிருக்கிறார். விஷயம், பத்திரிகைப் பேட்டிகளாகவும் வெளிவந்தது. அந்நாளைய இஸ்லாமிய காங்கிரஸ்காரர்களோ, பின்னாளைய ஹமாஸ் தலைவர்களோ இதனை மறுக்கவில்லை என்பதையும் பார்க்க வேண்டும்.

இட்ஸாக் செகெவ் ஒரு பிரிட்டன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், மிகத் தெளிவாகவே இதுபற்றிச் சொன்னார். பி.எல்.ஓ.வை எதிர்ப்பதற்காக அளிக்கப்பட்ட பணம் அது. எதிர்த்து நிற்கும் சக்தியாக ஹமாஸ் வளருமானால், அவர்களுக்கு உதவுங்கள். இதுதான் அளிக்கப்பட்ட உத்தரவு.

இதன்படி, இஸ்ரேல் அரசு அளித்த பணம் ஷேக் அகமது யாசின் தலைமையிலான இஸ்லாமிய காங்கிரஸுக்கு வரத் தொடங்கியது. அவர்கள் வருகிற பணத்துக்குக் கணக்கெழுதி, செலவுகளையும் தனிக்கணக்காக எழுதத் தொடங்கினார்கள். பள்ளிக்கூடங்களைச் செப்பனிடுவது, மசூதிகளைப் பழுதுபார்ப்பது அல்லது புதிதாகக் கட்டுவது, சாலை போடுவது, மாநாடுகள் நடத்துவது இன்னபிற. பரம ஏழைகளுக்குப் பணமாகவும் அவ்வப்போது அளித்தார்கள். உணவுப் பொருள்களாகவும் வாங்கி விநியோகித்தார்கள். அறிவிக்கப்படாத ஒரு தனியார் ரேஷன் கடையே நடத்தப்பட்டது என்று சொல்லலாம். ஒரே வித்தியாசம், இந்த ரேஷன் கடை அளந்து அளந்து பொருள் கொடுக்குமே தவிர, அஞ்சு பைசா கூட மக்களிடம் வாங்காது!

எல்லாம் ஏற்கெனவே செய்துகொண்டிருந்த பணிகள்தாம். ஆனால், நிறையப் பணம் வரும்போது புதிய உற்சாகத்துடன் செய்தார்கள்.

இது காஸா பகுதி மக்களுக்கு மிகவும் சந்தோஷமளித்தது. நமக்காக உதவ யார் இருக்கிறார்கள்? பி.எல்.ஓ.வும்தான் இஸ்ரேலுக்கு எதிராகப் போராடுகிறது. ஆனால், அவர்களே சாப்பாட்டுக்குக் கஷ்டப்படத்தானே செய்கிறார்கள்? அவர்களுக்கு என்றைக்கு விடிந்து, எப்போது நமக்கு உதவ முன்வருவார்கள்?

படிப்பறிவோ, உலக அறிவோ இல்லாத வெகு சாதாரண மக்களை ஹமாஸ் கவரத் தொடங்கியது இப்படித்தான். கண்ணை மூடிக்கொண்டு அவர்கள் ஹமாஸுக்காகக் கொடி பிடிக்கத் தொடங்கினார்கள். அப்போதுதான் பி.எல்.ஓ., இண்டிஃபாதா என்கிற மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றைத் தொடங்க உத்தேசித்துக்கொண்டிருந்தது.

இண்டிஃபாதா (Intifada) என்கிற அரபுச் சொல்லுக்கு எழுச்சி என்று அர்த்தம். போராளி இயக்கங்களுடன் மக்களையும் திரட்டி, இஸ்ரேலுக்கு எதிராக ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், பிற எதிர்ப்பு நடவடிக்கைகளை அமைதியான முறையில் மேற்கொள்ளச் செய்வது யாசிர் அராஃபத்தின் திட்டம்.

மக்கள் என்றால் பாலஸ்தீன் மக்கள். இஸ்ரேல் அபகரித்தது போக மேற்குக் கரையிலும் (West Bank) காஸாவிலும் எஞ்சியிருந்த முஸ்லிம் மக்கள்.

பிரச்னை என்னவென்றால், மேற்குக் கரை என்பது பாலஸ்தீனின் மேற்கு எல்லை. காஸா என்பது

இந்தப் பக்கம் எகிப்தைத் தொட்டுக்கொண்டிருக்கும் கிழக்கு எல்லை. நமக்குப் புரியும்படி சொல்வதென்றால், இந்தியாவுக்கு எப்படி பாகிஸ்தானும் பங்களாதேஷுமோ, அம்மாதிரி. இரண்டு மூலைகளில் இருக்கும் ஒரே தேசத்தின் இரு பகுதிகள். பாகிஸ்தான் விஷயத்தில் பங்களாதேஷ் போராடித் தனிநாடாகிவிட்டது என்றாலும், பாலஸ்தீன் விஷயத்தில் அப்படியொரு யோசனை அங்கே யாருக்கும் கிடையாது. பாலஸ்தீன் என்றால் இரண்டும் சேர்ந்ததுதான். முடிந்தால், இடைப்பட்ட இடைச்செருகலான இஸ்ரேலைத் துரத்திவிட்டு பழையபடி முழு பாலஸ்தீனை நிறுவுவது.

மேற்குக் கரையில் யாசிர் அரா∴பத்தான் பெருந்தலைவர். அவர் அங்கே வசித்துக்கொண்டிருந்தார், வசிக்காவிட்டாலும் அங்கேதான் அவருடைய வீடு என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. அந்தப் பிராந்தியத்தில் அரா∴பத்தைப் போன்ற இன்னொரு தலைவர் கிடையாது. பாலஸ்தீன் பிரச்னைக்கு அரசியல் ரீதியில் அவர் முன்வைத்த பல தீர்வுகளுக்கு எதிர்ப்புகள் பலமாக இருந்தாலும், மாற்றுத்தீர்வு முன்வைக்கக் கூட அங்கே ஒரு நாதி கிடையாது. அதனால் மக்களுக்கு அவர் மட்டும்தான் வழிகாட்டி.

காஸா அப்படியல்ல. அங்கே பி.எல்.ஓவைக் காட்டிலும் ஹமாஸுக்குச் செல்வாக்கு அதிகம். அவர்களுடைய இடைவிடாத மக்கள் பணிகள் காரணம். செய்த உதவிகள் காரணம். தவிரவும், அரா∴பத் சிந்திக்காத இஸ்லாமிய தேசியவாதம் என்கிற முழக்கத்தை அவர்கள் முன்வைத்ததும் ஒரு காரணம்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனுக்கும் பிரச்னை என்று மட்டுமே அரா∴பத் சொல்லிவந்த காலத்தில் முதன்முதலாக, 'இது இஸ்ரேல் – பாலஸ்தீன் பிரச்னை இல்லை; யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமான பிரச்னை' என்று மதத்தை முன்னிறுத்தியது ஹமாஸ்தான். மக்கள் மனதில் எது சுலபத்தில் ஏறும்?

இண்டி∴பாதா போராட்டத்தை பி.எல்.ஓ அறிவித்து வழி நடத்த ஆரம்பித்தபோது, காஸாவில் என்ன நடக்கப் போகிறது என்பதுதான் கேள்வியாக இருந்தது. பெரும்பாலும் ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருந்தது காஸா. ஹமாஸ், இந்த இண்டி∴பாதாவை ஆதரிக்குமா அல்லது எதிர்க்குமா?

அரா∴பத்துக்கே இந்தக் கவலை இருந்தது.

ஹமாஸ் தலைவர்கள் இதனை வேறு விதமாகப் பார்த்தார்கள். மக்கள் எழுச்சி என்பது இயல்பாக எழுவது. அரசியல் இயக்கங்கள் அதை ஆதரிக்கலாம், ஊக்கப்படுத்தலாமே தவிர, தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. இண்டி∴பாதாவை ஹமாஸ் எதிர்த்தால், ஹமாஸின் புகழ் குறையும். கெட்டபெயர் வரும். தவிரவும் பாலஸ்தீன் சுதந்திரத்துக்காக மேற்கொள்ளப்படுகிற எந்த ஒரு நல்ல முயற்சியையும் அவர்கள் கெடுக்க முனையமாட்டார்கள்.

யாசின் யோசித்தார். இறுதியில் அவர் கண்டுபிடித்த வழி 'வீதிக்கு இறங்கிப் போராடுங்கள். ஆனால், அல்லாஹு அக்பர் என்று குரல் கொடுத்தபடி ஊர்வலம் போங்கள்!'

பாலஸ்தீன் இண்டி∴பாதாக்களுக்கு உலகின் வேறு எந்தப் பகுதியில் நடைபெற்ற, எந்த ஒரு மக்கள் போராட்டத்தையும் உதாரணம் காட்ட முடியாது. பெரும்பாலான மக்கள் கலந்துகொண்டார்கள், கூட்டம் கூட்டமாக வந்தார்கள், அலையலையாகத் திரண்டார்கள் என்று எப்படிச் சொன்னாலும் அது குறைத்து மதிப்பிடுவதாகத்தான் அமையும். உண்மையில், பாலஸ்தீனிலிருந்த ஒவ்வொரு முஸ்லிமும் அந்த எழுச்சிப் பேரணிகளில் பங்குபெற்றார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள். கைக்குழந்தைகளைக் கூடத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். நடக்கவே முடியாத தொண்டு கிழவர்களும் கிழவிகளும் தடி ஊன்றியபடி நடந்து வந்தார்கள். அப்படியும் முடியாதவர்களைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

வீதிகள் எங்கும் மனிதத் தலைகள் நிறைந்தன. அமைதியான ஊர்வலம். ஆர்ப்பாட்டமான கோஷங்கள். ஆங்காங்கே கலவரம். 'அல்லாஹு அக்பர்' கோஷங்கள். அரசியல் மட்டுமே பேசிய பொதுக்கூட்டங்கள். மதம் கலந்த வீர உரைகள். எல்லாம், எல்லாமே நடைபெற்றன. ஒரு நாள் இருநாள் திருவிழா இல்லை அது. மாதக்கணக்கில் தொடர்ந்த போராட்டம்.

இஸ்ரேல் அரசுக்கு இது மிகப்பெரிய தலைவலி ஆனது. சர்வதேச கவனத்தை ஈர்க்கும் திட்டம் போராட்டக்காரர்களுக்கு இருந்தது. உலக மீடியாக்கள் அனைத்தும் பாலஸ்தீனில் வந்து முகாமிட்டிருந்தது. மேற்குக் கரையில் பி.எல்.ஓவும் காஸாவில் ஹமாஸும் மிகக் கவனமாக இந்தப் போராட்டங்களை வழி நடத்தியும் மீடியாவுக்குத் தீனிபோட்டுக்கொண்டும் இருந்தார்கள்.

மத்தியக் கிழக்கு தேசங்கள் அனைத்தும் இந்தப் போராட்டங்களுக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் அளித்துப் பேசத் தொடங்கின. ஆசிய நாடுகளில் பெரும்பாலான இடங்களில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு பெருகிக்கொண்டிருந்தது. இஸ்ரேல் கவலை கொண்டது. பாலஸ்தீன் இயக்கங்கள் சர்வதேச அனுதாபத்தைப் பெற்றுவிடுமானால், அதைக் காட்டிலும் பெரிய தலைவலி இருக்கமுடியாது. இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவுகிறது. பிரிட்டன் உதவுகிறது. பிரான்ஸ் உதவுகிறது. பல ஐரோப்பிய தேசங்கள் இஸ்ரேலை ஆதரிக்கின்றன.

ஆனால், விஷயம் அதற்கு மேலே போய் ஐ.நாவின் தலையீடு, கமிஷன் மண்ணாங்கட்டி, நடுநிலைப் பார்வையாளர்கள் என்று ஆரம்பிப்பார்களேயானால் பிரச்னை பெரிதாகும்.

ஆகவே, இண்டிஃபாதா போராட்டங்களை ஒடுக்குவது என்று இஸ்ரேல் முடிவு செய்தது. மேற்குக் கரையில் பிரச்னை இல்லை. அராஃபத் இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் ஆரம்பித்திருப்பார்.

ஆனால் காஸா? எந்த ஹமாஸுக்கு இஸ்ரேல் அரசு உதவி செய்ய முன்வந்து உதவிக்கொண்டிருந்ததோ, அதே ஹமாஸ்தான் அப்போது போராட்டத்தை மும்முரமாக நடத்திக்கொண்டிருந்தது. எந்த அராஃபத்துக்கு எதிராக அவர்களைக் கொம்பு சீவிவிட முயற்சி செய்துகொண்டிருந்தார்களோ, அதே அராஃபத் நடத்திய போராட்டத்தைத்தான் காஸாவில் ஹமாஸ் முன்னெடுத்துச் சென்றுகொண்டிருந்தது.

எனில், இஸ்ரேல் அரசு இப்போது மோதப்போவது யாருடன்? இண்டிஃபாதாவைத் தடுக்க முனைந்தால், அது ஹமாஸின் செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாகும். ஹமாஸ் கோபிக்கும்.

கோபித்தால்?

என்ன ஆகும் என்று அவர்களால் சரியாக யூகிக்க முடியவில்லை. அதனால்தான், மக்கள் எழுச்சிக்கு எதிராக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

விளைவுகள் மிகப் பயங்கரமாக இருந்தன.